அரசு கலைக்கல்லூரி பரமக்குடி

பொருளியல் துறை

மாநில அளவில் கருத்தரங்கு

பரமக்குடி அரசு கல்லூரி பொருளியல் துறை சார்பாக மாநில அரவில் கருத்தரங்கு 02-08-2024 தேதி காலை 10.00 மணிக்கு நடைபெற்றது, இந்த கருத்தரங்கில் பொருளியல் துறை கொளரவ விரிவுரையாளர் திரு S.நாகராஜன் அவர்கள் வரவேற்புரையும்,கல்லூரி முதல்வரும் (மு.கூ.பொ)மின்னணுவியல் துறை தலைவருமாகிய இணை பேராசிரியர் ச.சிவக்குமார் தலைமை உரையும் ,பொருளியல் துறை தலைவரும் இணைப்பேராசிரியர் முனைவர் மூ.விஜயகுமார் " பொருளியல் கற்பதால் கிடைக்கும் வாய்ப்பும் வழிகளும் " பற்றிசுருக்கமாகவும் உரையாற்றினார் .இதில் சிறப்பு விருந்தினரை அறிமுக செய்ய வரலாற்று துறைத்தலைவரும், இணைப்பேராசிரியர் முனைவர் வீ.கோவிந்தன் அவர்கள் அறிமுகப்படுத்தி உரையாற்றினர். இந்த விழாவிற்க்கு சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட சென்னை கிருஸ்துவ கல்லூரி பொருளியல் பேராசிரியர் திரு முனைவர் S.இராமகிருஷ்ணன் என்பவர் "பொருளியல் கற்பதால் கிடைக்கும் வாய்ப்பும் வழிகளும் " என்ற தலைப்பில் மிக விரிவாக மாணவ- மாணவிகளுக்கு விளக்கவுரை ஆற்றினார், மேலும் இக்கல்லூரியில் மூத்த பேராசிரியரும் கணித துறை தலைவர் முனைவர் அ.அறிவழகன் என்பவர் வாழ்த்துரை வழங்கி சிறப்பித்தனர்,மேலும்இந்த மாநில அளவில் நடந்த விழாவில் கல்லூரி அனைத்து துறைதலைவர்களலான முனைவர் கண்ணன்(வணிகவியல்துறை),பேராசிரியர் பேராசிரியர் திருமதி மோகன கிருஷ்ணவேணி(வேதியியல்துறை), பேராசிரியர் திருமதி மும்தாஜ்பேகம் (கணணிஅறிவியல் துறை) ,பேராசிரியர் முனைவர் இராமமூர்த்தி (இயற்பியல் துறை) உடற்கல்வி இயக்குநர் முனைவர் பிரசாத் அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள், மேலும் இந்த விழாவில் நம் கல்லூரி பல்வேறு துறை பேராசிரியர்கள் மற்றும் கௌரவ விரிவுரையாளர்களும். நம் துறை மாணவ-மாணவிகளும். பல்வேறு கல்லூரி மாணவா-மாணவிகளும் கலந்து கொண்டு பயன் பெற்றனர். இறுதியாக விழா முடிவில் பொருளியல் துறை கௌரவ விரிவுரையாளர் திருமதி K.அற்புதவள்ளி கலந்து கொண்டவர்களுக்கு நன்றிஉரை கூறினார்

முனைவர் மூ.விஜயகுமார்

பொருளியல் துறைத்தலைவர்

அரசு கலைக்கல்லூரி – பரமக்குடி




GOVERNMENT ARTS COLLEGE
Department of Economics




GOVERNMENT ARTS COLLEGE
Department of Economics

